# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்

## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)

## அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் 30.11.2012 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தசஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹாவை ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:**

இப்போது நான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் சஹாபாக்களின் சில சம்பவங்களை எடுத்துக் கூறுவேன். இதில் அந்த சஹாபாக்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மீது கொண்டிருந்த முழுமையான நம்பிக்கையை எடுத்துக் காட்டும் சம்பவங்கள் உள்ளன. சஹாபாக்களின் மீது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் நூல்கள் ஏற்படுத்திய சிறந்த தாக்கம், அந்த நூல்களைப் படித்ததால் அவர்களின் உள்ளங்களில் சத்தியம் வெளிப்பட்டது. இது தொடர்பான ஓரிரு சம்பவங்கள் உள்ளன. அவ்வாறே அல்லாஹ் கனவுகளின் மூலமாக அவர்களுக்கு எவ்வாறு வழிகாட்டினான் என்பதற்கான சில சம்பவங்களும் உள்ளன. சம்பவங்கள் யாவும் மிக நீண்டவையாகும். எனவே அவற்றில் ஒவ்வொன்றிலும் ஒரு சம்பவத்தை மட்டும் எடுத்துள்ளேன்.

**ஹஸ்ரத் சேக் ஸைனுல் ஆபிதீன் சாஹிப் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:**

ஒருமுறை எனது அண்ணன் மனைவி உடல்நலம் சரியில்லாமல் ஆனார்கள். இனி காதியான் செல்வதைத் தவிர வேறு வழியில்லை என்று எண்ணினேன். அதாவது காதியானுக்கு அழைத்துச் செல்லலாம். அங்கு முதல் கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் மருத்துவராவார்கள். அவர்களிடம் சிகிச்சை பெறலாம் அல்லது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் துஆவிற்காக விண்ணப்பிக்கலாம் என்று எண்ணினார்கள்.

எவ்வாறிருப்பினும், அவர்கள் கூறுகின்றார்கள்: நாங்கள் அங்கு சென்றோம். தாயாரும், சகோதரரும் உடன் இருந்தார்கள். வழியில் நாங்கள், (அவர்கள் கையால் எழுதியுள்ளார்கள். அதை வாசிக்க முடியவில்லை. எனினும் அவர்கள் இவ்வாறு தான் எழுதியுள்ளார்கள்.) நோயுற்றிருந்த பெண்ணிடம், “மவ்லவி நூருத்தீன் சாஹிபிடம் சிகிச்சை பெற்றுக் கொள் என்று ஹஸ்ரத் சாஹிப் கூறுவார்கள். ஆனால் நான் ஹுஸூர் உங்களிடமே சிகிச்சை பெற விரும்புகிறேன். மவ்லவி சாஹிபிடம் ஒருபோதும் சிகிச்சை பெற மாட்டேன் என்று சொல்ல வேண்டும்” என்று கூறி புரிய வைத்தோம்.

அவர் கூறுகிறார்: நாங்கள் காதியான் சென்றடைந்தோம். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள், “மவ்லவி சாஹிப் உங்களுக்கு சிகிச்சை அளிப்பார்கள்” என்று கூறினார்கள். ஆனால் அந்தப் பெண், “ஹுஸூர்! நான் மவ்லவி சாஹிபிடம் சிகிச்சை பெறத் தயாரில்லை. ஹுஸூர்! நீங்களே சிகிச்சை செய்யுங்கள்” என்று கூறினார். ஹுஸூர் (அலை) அவர்கள் ஒரு மருந்து எழுதினார்கள். மூன்று பாட்டில்கள் தேன் வீட்டிலிருந்து கொண்டு வந்து கொடுத்தார்கள். நான் நாளை லூதியானாவிற்குச் செல்கிறேன். நீங்கள் இந்த சிகிச்சையை தொடங்குங்கள். நோய் மிகவும் அபாய நிலையில் உள்ளது. எனவே எனக்கு கடிதம் மூலமாக தகவல் கொடுங்கள் அல்லது நேரில் வாருங்கள் என்று கூறினார்கள்.

அவர் கூறுகிறார்: நாங்கள் அந்த மருந்துச் சீட்டை வாங்கி ஹஸ்ரத் மவ்லானா நூருத்தீன் சாஹிபிடம் காண்பித்தோம். அவர்கள் கூறினார்கள். “இந்த நோயாளிக்கு இந்த மருந்து மிகவும் தீங்கிழைக்கக் கூடியதாகும். நான் இந்த மருந்தை இவ்வாறான நோயாளிக்கு கொடுத்தால் அவர் ஒரே நிமிடத்தில் மரணமடைந்து விடுவார். ஆனால் இந்த மருந்தை ஹுஸூர் எழுதிக் கொடுத்துள்ளார்கள். எனவே இந்தப் பெண் கண்டிப்பாக குணமடைந்து விடுவாள்” என்றார்கள். எனவே நாங்கள் அந்த மருந்தை வாங்கிப் பயன்படுத்தினோம். அந்தப் பெண் இரண்டு, மூன்று நாளில் குணமடைந்து விட்டாள்.

ஹஸ்ரத் முதல் கலீஃபாவிற்கு முழுமையான நம்பிக்கை இருந்தது. எனவே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள், நூருத்தீனைப் போன்றவர்கள் எனக்கு கிடைத்தால் புரட்சி ஏற்பட்டு விடும் என்று கூறினார்கள். அந்த கிராமவாசிகளுக்கும் முழுமையான நம்பிக்கை இருந்தது. மருந்து எவ்வாறு இருந்தாலும்

நாங்கள் அதை பயன்படுத்துவோம் என்று கூறி பயன்படுத்தினார்கள். இதனால் குணம் கிடைத்தது. அல்லாஹ் நிவாரணம் வழங்கினான்.

**ஹஸ்ரத் மியான் முஹம்மது சரீஃப் சாஹிப் கஷ்மீரி (ரலி) அறிவிக்கின்றார்கள்:**

மியான் ஜமாலுத்தீன் சாஹிப் சேக்குவானி, மவ்லவி இமாமுத்தீன் சாஹிப் சேக்குவானியின் சகோதரர் ஆவார். ஹுஸூரிடம் கூறினார். ஹுஸூர் பள்ளிவாசலின் மேல்தளத்தில் இருந்தார்கள். அப்போது "ஹுஸூர், இவர் எமது சகோதரர் முஹம்மது சரீஃப் ஆவார். இவரது ஊரில் பிளேக் நோய் கடுமையாக உள்ளது. இவருக்காக துஆ செய்யுங்கள்" என்றார். அப்போது ஹுஸூர் (அலை) அவர்கள் என்னைப் பார்த்து, "பிளேக் நோய் எந்த மாதிரியாக இருக்கின்றது?" என்று கேட்டார்கள். நான், "முதலில் எலிகள் இறக்கின்றன" என்றேன். அதற்கு அவர்கள், "இது இறைவன் புறமிருந்து வந்துள்ள ஒரு நோட்டீஸ் ஆகும்" என்றார்கள். பிறகு நான் "ஹுஸூர், சிவப்பு கொப்பளங்கள் தோன்றினால் அந்த நோயாளி பிழைத்துக் கொள்கிறார். மஞ்சள் கொப்பளங்கள் உள்ள நோயாளி பிழைப்பதில்லை" என்றேன். "நீங்கள் அங்கு செல்வதுண்டா?" என்று ஹுஸூர் கேட்டார்கள். "நான் செல்லலாமா?" என்று கேட்டேன். "தவிர்ப்பது நல்லது" என்று கூறினார்கள். "பொதுவாக அவர்கள் அருகில் செல்லாதீர்கள். ஆனால் ஈமானின் உறுதி கொண்டவருக்கு எந்த ஆபத்துமில்லை. அவர் பிளேக்கினால் மரணிக்க மாட்டார்" என்றார்கள். அதற்கு நான், "எனது மனைவி பிளேக் நோயால் மரணமடைந்து விட்டாள்" என்றேன். ஹுஸூர் கூறினார்கள். "என் மீது அவருக்கு முழுமையான நம்பிக்கை இருக்கவில்லை என்று தெரிகிறது. ஈமான் இருந்தால் இவ்வாறு நோயால் மரணித்திருக்க மாட்டாள்" என்றார்கள்.

அவர் கூறுகிறார்: அவர் பைஅத் செய்யவில்லை என்று நான் புரிந்து கொண்டேன். நீங்கள் இஸ்திக்ஃபார் ஓதுங்கள் என்று ஹுஸூர் கூறினார்கள். எங்களது முழு குடும்பமும் நோயால் அவதிப்பட்டுக் கொண்டிருந்தது. ஹுஸூருக்கு கடிதம் எழுதினேன். இஸ்திக்ஃபார் ஓதுங்கள் என்று மீண்டும் பதில் எழுதினார்கள். நாங்கள் இஸ்திக்ஃபார் ஓதினோம். இதனால் அல்லாஹ்வின் அருளால் நாங்கள் அனைவரும் சுகமடைந்து விட்டோம்.

**மியான் முஹம்மது சரீஃப் கஷ்மீரி சாஹிப் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:**

மியான் ஸித்தீக் சாஹிபின் தந்தை ஜமாலுத்தீன் சாஹிப் சேக்குவானி என்னிடம் கூறினார். "மன்னர்கள் உமது ஆடையிலிருந்து பரக்கத்தைத் தேடுவார்கள்" என்பது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் ஒரு இல்ஹாம் ஆகும். எங்களுக்கு பரக்கத் கிடைக்காதா? என்று எண்ணினேன். அவர்களின் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்து கொண்டிருந்தது. அவர்களுக்கு ஹுஸூரின் தலைப்பாகையின் ஒரு துணி கிடைத்தது. அதை தமது கண்களில் தடவினார்கள். இதனால் அவர்களின் கண்கள் குணமடைந்தன. அவர்கள் கூறுகின்றார்கள். எனக்கும் கண்களில் வீக்கம் இருந்தது. நானும் எனது கண்களில் தேய்த்தேன். அது குணமடைந்தது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது நூல்களின் தாக்கம் தொடர்பான இரண்டு சம்பவங்கள் உள்ளன.

**மியான் நூருத்தீன் சாஹிபின் மகன், ஹஸ்ரத் மியான் முஹம்மது தீன் சாஹிப் கூறுகின்றார்கள்:**

அவர்கள் சில கருத்துக்களை மேலே கூறியுள்ளார்கள். அதன் தொடர்ச்சியாக கூறுகிறார்கள். நான் முன்னதாக கூறியுள்ளேன். அதாவது ஆரியர்கள், பிரமனர்கள், நாத்திகர்கள் ஆகியோரின் சொற்பொழிவுகளின் தீய விளைவுகள் என்னையும், என்னைப் போன்ற இன்னும் பலரையும் சீரழித்து விட்டது. அதாவது இறைவனை விட்டு விலக்கி விட்டது. இந்த தீய விளைவுகளின் தாக்கத்தால் அர்த்தமற்ற வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருந்தேன். அப்போது பராஹீனே அஹ்மதிய்யா படிப்பதற்குக் கிடைத்தது. அதை படிக்க ஆரம்பித்தேன். இதுவும் அல்லாஹ்வின் அருளாகும். அவன், நூல்களைப் படிப்பதற்கான நற்பாக்கியம் வழங்கியுள்ளான். இந்த நற்பாக்கியத்தைப் பெறாத பலர் இருக்கின்றனர். அவர்களின் இயல்பில் பிடிவாதத் தன்மை இருக்கிறது. ஆனால் அல்லாஹ் இவருக்கு அருள் புரிந்தான்.

இவர்கள் கூறுகிறார்கள்: எனக்கு பராஹீனே அஹ்மதிய்யா கிடைத்தது. அதை வாசிக்க ஆரம்பித்தேன். அதை வாசித்துக் கொண்டிருக்கையில் இறை இருப்பைப் பற்றி படிக்கும் போது, 90வது பக்கத்தின் இரண்டாவது அடிக்குறிப்பையும், 149வது பக்கத்தின் 11வது அடிக்குறிப்பையும் வாசிக்கும் போது எனது நாத்திகக் கொள்கை கற்பூரம் போன்று மறைந்து விட்டது.

இது ரூஹானி கஸாயின் முதல் பாகத்தின் 78வது பக்கமாகும். இவர் அடிக்குறிப்பு எண் இரண்டு என்று எழுதியுள்ளார். உர்துவில் எண்கள் எழுதப்பட்டிருக்கும். எனவே இது இரண்டு அல்ல. மாறாக, அடிக்குறிப்பு எண் நான்கு ஆகும். இவ்வாறே ரூஹானி கஸாயினின் முதல் பாகத்தின் 153வது பக்கத்தில் இவர் குறிப்பிட்டுள்ள அந்த மேற்கோள் காணப்படுகிறது. அது அடிக்குறிப்பு எண் 11 முதல் ஆரம்பமாகி 4-5 பக்கங்கள் தொடர்ந்து இக்கருத்து உள்ளது. இதை வாசித்தால் அல்லாஹ்வின் இருப்பு பற்றிய கருத்து தெளிவு பெறுகிறது.

ஆக, எவ்வாறிருப்பினும் அவர்கள் கூறுகின்றார்கள்: நான் இந்தப் பகுதியைப் படித்ததும் உடனடியாக எனது நாத்திகம் கற்பூரத்தைப் போன்று மறைந்து விட்டது. தூங்குபவரோ அல்லது மரணித்த ஒருவரோ உயிர் பெற்று எழுதுவது போல் என் கண்கள் திறந்தன. குளிர்காலம் ஜனவரி 1893 ஆம் ஆண்டு 19 ஆம் தேதியாகும். நள்ளிரவு நேரமாக இருந்தது. நான் (இறைவன்) இருக்க வேண்டும் என்ற நிலையிலிருந்து (அவன்) இருக்கிறான் என்ற நிலையை அடைந்தேன்.

அதாவது, இங்கு அல்லாஹ்வின் இருப்பு பற்றி கூறப்பட்டுள்ளது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

படைக்கப்பட்டுள்ள ஒவ்வொரு பொருளையும் பார்க்கும் போது, இதை உருவாக்கியவன் ஒருவன் இருக்க வேண்டும் என்ற எண்ணம் தோன்றுகிறது. மேலும் இதை உருவாக்கியவன் ஒருவன் இருக்கின்றான் என்ற நம்பிக்கையும் ஆகும். இவ்விரண்டு கருத்துக்களையும் இறை இருப்பிற்கான ஆதாரமாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் எடுத்துக் கூறியுள்ளார்கள். அல்லாஹ் இருக்கிறான் என்ற இந்த உணர்வுதான் உண்மையில் அல்லாஹ்வின் மீது நம்பிக்கையை உருவாக்குகிறது.

ஆக, இந்தக் கருத்து மிகவும் ஆழமானது. இதன் விளக்கத்தை இப்போது கூறிவிட முடியாது. பராஹீனே அஹ்மதிய்யாவில் அது எழுதப்பட்டுள்ளது. அதைப் படியுங்கள். அவர் கூறுகிறார்: நான் இந்நூலைப் படித்துக் கொண்டிருக்கும் போது நள்ளிரவு நேரமாக இருந்தது. (இறைவன்) இருக்க வேண்டும் என்ற நிலையிலிருந்து (அவன்) இருக்கிறான் என்ற நிலையை அடைந்தேன். அதை வாசித்தவுடன் தவ்பா செய்ய வேண்டும் என்பதன் பக்கம் கவனம் ஏற்பட்டது. நான் உடனே தவ்பா செய்தேன். புதிய மண்பானையில் குளிர்ந்த தண்ணீர் வெளியே முற்றத்தில் இருந்தது. ஜனவரி மாதம் மண்பனை தண்ணீர் எவ்வளவு குளிர்ந்திருக்கும் என்று நீங்களே சற்று யூகித்துப் பாருங்கள். என் பக்கத்தில் கட்டில் இருந்தது. எனது வேஷ்டியைக் குளிர்ந்த தண்ணீரில் துவைத்தேன். மங்த்து என்ற பெயரை உடைய எனது வேலைக்காரர் தூங்கிக் கொண்டிருந்தார். நான் துவைத்துக் கொண்டிருந்ததால் விழித்தெழுந்தார். என்ன ஆகிவிட்டது? என்று அவர் என்னிடம் கேட்டார். இந்த வேஷ்டியை என்னிடம் கொடுங்கள். நான் துவைத்துத் தருகிறேன் என்றார். ஆனால் நான் குடித்திருந்த அந்த மதுபானத்தால் ஏற்பட்ட இன்பம் யாரிடமும் பேசுவதை அனுமதிக்கவில்லை. இறுதியில் மங்த்தூ அமைதியாகி விட்டார்.

அவர் கூறுகிறார்: நான் ஈரமான வேஷ்டியை உடுத்திக் கொண்டு தொழ ஆரம்பித்தேன். மங்த்தூ அதைப் பார்த்துக் கொண்டே இருந்தான். மிகுந்த ஈடுபாட்டுடன் நான் மிக நீண்ட நேரம் தொழுதேன். இதனால் எனது வேலைக்காரர் மங்த்தூ களைப்படைந்து தூங்கி விட்டார். நான் தொழுது கொண்டே இருந்தேன். இந்தத் தொழுகையை பராஹீன் தான் தொழ வைத்தது. அதன் பின்னர் இதுவரை நான் தொழுகையை விட்டதில்லை.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் இந்த அற்புதத்தைக் கூறவே நான் இந்த அழகிய நீண்ட முன்னுரையை எழுதியுள்ளேன். அதாவது, பராஹீனே அஹ்மதிய்யா என்னுள் ஒரு புரட்சியை எவ்வாறு ஏற்படுத்தியது என்பதை கூறுவதற்காகவே நான் இந்த முன்னுரையை எழுதியுள்ளேன் என்று கூறுகிறார்.

அவர் கூறுகிறார்: வாலிபப் பருவத்தில், திருமணமாகாதவனாக நான் இருந்தேன். அப்போது கார்த்திகை நட்சத்திரத்தை விடவும் உயரமாகவே சென்று விட்ட ஈமானை மீண்டும் கொண்டு வந்து என் உள்ளத்தில் நிலை நிறுத்தி விட்டார்கள். அந்த இரவில் நான் நிராகரிப்பவனாக நுழைந்தேன். அதன் காலைப்பொழுது விடியும் போது முஸ்லிமாக நான் வெளிவந்தேன். பராஹீனே அஹ்மதிய்யாவை வாசித்ததன் காரணமாக, முஸ்லிமாக எனக்கு விடிந்த காலைப்பொழுதில் நான் நேற்று மாலை வரை இருந்த அந்த முஹம்மது தீனாக இருக்கவில்லை. எனது இயல்பில் வெட்க உணர்வு அதிகமாக இருந்தது. ஆனால், தீயவர்களுடன் சேர்ந்ததன் காரணமாக அந்த உணர்வு மறைந்திருந்தது. அல்லாஹ் தனது அருளாலும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களின் அருளாலும் எனக்கு எனது வெட்க உணர்வு திரும்பவும் கிடைத்தது. அப்போது நான் இந்த வசனத்தின் நிழலின் கீழ் சுகம் அனுபவித்துக் கொண்டிருந்தேன். சூரா அல் ஹுஜுராத்தின் 7வது வசனம் என்று இங்கு எழுதப்பட்டுள்ளது. ஆனால் இது 8, 9 வசனங்களாகும்.

*அல்லாஹ் நம்பிக்கையை உங்களுக்கு விருப்பமானதாகவும், அதனை உங்கள் உள்ளங்களுக்கு அழகு வாய்ந்ததாகவும் ஆக்கியுள்ளான். மேலும் அவன் நிராகரிப்பையும், கொடுமையையும், கீழ்ப்படியாமையையும் உங்களுக்கு வெறுப்பானவையாக ஆக்கியுள்ளான். இத்தகையோரே நேரான வழியைப் பின்பற்றுபவராவார்கள். இது அல்லாஹ்வின் அருளும் வளமும் ஆகும். அல்லாஹ் நன்கு அறிபவனும் நுண்ணறிவுள்ளவனுமாவான். (49:8,9)*

அவர் கூறுகிறார்: ஈமான் கொண்டவுடன் எனது உள்ளத்தில் திருக்குர்ஆனின் மகிமையும் அதன் அன்பும் நிலை கொண்டது. ஈமானின் வேராகிய சரீஅத்தின் அறிவைப் பெறுவதற்கான ஆர்வமும், கவலையும் ஆட்கொண்டது. அதன் பிறகு 1893-94 ஆம் ஆண்டு பராஹீனே அஹ்மதிய்யாவை முழுவதுமாக வாசித்து முடித்தேன். தஹஜ்ஜுத் தொழுகைக்குப் பிறகு நான் அதை வாசித்து வந்தேன். அதன் பிறகு ஆயினாயே கமாலாத்தே இஸ்லாம் என்ற நூலைப் படித்தேன். அது தவ்ஸிஉல் மராமின் விளக்கமாகும்.

12ம் நம்பர் வீடு, பலானி கிராமம், காரியான் தாஸில், குஜராத் மாவட்டத்தைச் சேர்ந்த ஹஸ்ரத் கிப்லா முன்ஷீ மிர்ஸா ஜலாலுத்தீன் சாஹிப் பென்சனர் அவர்கள் ஸியால்கோட் சாவடியிலிருந்து பலானிக்கு இரண்டு மாதங்கள் விடுப்பு எடுத்து வந்தார். பலானியில் தான் நான் வேலை பார்த்து வந்தேன். அவரிடம் விலாசம் பெற்று பைஅத் கடிதம் எழுதினேன். அக்டோபர் 1894 -ல் அதற்கு பதில் கிடைத்தது. வெளிப்படையாக பைஅத் செய்வதும் அவசியமாகும் என்று அதில் எழுதப்பட்டிருந்தது. எனவே நான் ஜூன் 5, 1895 அன்று முபாரக் பள்ளிவாசலின் மாடியில் இருந்த அறையின் வாசல் கதவின் கிழக்குப் பகுதியில் வைத்து ஹஸ்ரத் சாஹிபிடம் பைஅத் செய்தேன்.

**ஹஸ்ரத் மியான் நூருத்தீன் சாஹிபின் மகன் முஹம்மது தீன் சாஹிப் கூறுகின்றார்கள்:**

நான் மார்க்க அறிவு இல்லாதவனாவேன். மவ்லவிகள் என்னை துன்புறுத்துவார்களே! நான் என்ன செய்வேன்? என்ற எண்ணம் எனக்குத் தோன்றியது. ஆனால் இதைக் கேட்பதற்கு வெட்கப்பட்டுக் கொண்டிருந்தேன். ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களிடமோ அல்லது வேறு யாரிடமோ கேட்பதற்கு வெட்கப்பட்டுக் கொண்டிருந்தேன். நான் கேட்காமலேயே ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் எனக்கு இதற்கான பதிலைக் கூறினார்கள்.

அவர் கூறுகிறார்: மஸ்ஜித் முபாரக்கின் மேல் தளத்தில் மிஹ்ராபில் படுத்திருந்தார்கள். அவர்களின் தலை வடக்குப் பக்கத்தில் இருந்தது. நான் முதுகுக்குப் பின்னால் கிழக்குப் பக்கமாக முகம் திருப்பி அவர்களின் கைகளை அமுக்கிக் கொண்டிருந்தேன். கேட்பதற்கு எனக்கு வெட்கமாக இருந்தது. ஆனால் அமுக்கிக் கொண்டிருக்கும் போதே உள்ளத்தில் தோன்றியது. அவர் கூறுகிறார். படுத்திருந்தவாரே ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் என் பக்கம் திரும்பி மிகவும் கம்பீரமான தொனியில், எமது நூல்களைப் படிப்பவர் ஒருபோதும் தோல்வியடைய மாட்டார் என்று கூறினார்கள்.

இன்றும் நம்மிடம் இந்தக் களஞ்சியம் உள்ளது. அதைப் பெறுவதற்கு நாமும் முயற்சி செய்ய வேண்டும். இப்போது அல்லாஹ்வின் அருளால் பல நூல்கள் பல மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

இன்னொரு அறிவிப்பு உள்ளது. இன்னும் சொல்வதென்றால் இரண்டு அறிவிப்புகள் உள்ளன. முதலில் ஒன்றை கூறிய பிறகு பெரிய அறிவிப்பை எடுத்துக் கூறுவேன்.

**ஹஸ்ரத் சவுத்ரி ஃபதஹ் முஹம்மது சாஹிப் கூறுகின்றார்கள்:**

நவாப் தீன் என்ற எனது சகோதரருக்கு கனவு வந்தது. அதாவது ஹுஸுர் என்னிடம் 8 அனா பைசா கேட்கிறார்கள். நானும் எனது சகோதரர் நவாப் தீனும் பைசா கொடுக்கச் சென்றோம். கனவைக் கூறியதும் ஹுஸுர், ''இந்தக் கனவின் விளைவாக நீ அறிவைக் கற்பாய்'' என்று கூறினார்கள். எனவே மவ்லவி சிக்கந்தர் அலி எங்களது கிராமத்திற்கு வந்ததும் அவரிடம் நானும், நவாப் தீனும், இன்னும் பலரும் திருக்குர்ஆன் ஓதினோம். பிறகு இன்னும் சில உர்து புத்தகங்களையும் படித்தோம். இவ்வாறு ஹுஸுரின் கூற்று நிறைவடைந்தது.

பிறகு கூறுகின்றார்கள்: எங்களது ஊரில் ஒரு அரச மரம் இருந்தது. அதை நாங்கள் மவ்லவி நிஸாமுத்தீன் சாஹிபிற்கு விற்றோம். அப்போது எங்களது ஊரில் பிளேக் நோய் பரவியது. அந்த அரச மரத்தின் விலைக்குரிய ரூபாயை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நடைபயிற்சிக்காக வந்த போது தானமாகக் கொடுத்தோம். ஹுஸுர் வழியிலிருந்து விலகி எங்களின் ஊர் பள்ளிவாசலுக்குப் பக்கத்தில் வந்து துஆ செய்தார்கள். இதனால் பிளேக் நோய் போய் விட்டது.

**ஹஸ்ரத் ஃபஸ்ல் தீன் சாஹிப் (ரலி) அவர்கள் தமது பைஅத்தின் சம்பவத்தை இவ்வாறு கூறுகின்றார்கள்:**

நான் முதலில் ஒரு சுதந்திர சிந்தனையுடைய மனிதனாக இருந்தேன். சில வருடங்கள் சுதந்திர சிந்தனையிலேயே கழிந்தது. அதன் பிறகு மெல்ல மெல்ல சில நண்பர்களின் பேச்சைக் கேட்டு நான் நக்ஷ்பந்தி குடும்பத்தின் முரீதாகி விட்டேன். ஏனெனில் எனது நண்பர்களும் நக்ஷ்பந்தி குடும்பத்தின் முரீது ஆவார்கள். எங்களது முர்ஷித் எங்களது ஊரிலேயே வசித்து வந்தார். இந்தக் குடும்பம் தம்மை சரீஅத்தைப் பின்பற்றுபவர்களாகக் கூறுவர். தமது வம்சா வழி ஹஸ்ரத் அபூபக்கர் ஸித்தீக்கை சேர்கிறது என்று கூறுவர். இதனால் பைஅத் செய்த தொடக்கக் காலத்தில் தொழுகை, நோன்பு ஆகியவற்றை மிகவும் அதிகமாக வலியுறுத்தினார்கள். தஹஜ்ஜுத் தொழுகையையும் கண்டிப்பாக தொழ வேண்டும் என்று வலியுறுத்தினார்கள். தஹஜ்ஜுத் தொழுகையை ஒருபோதும் விடக்கூடாது என்று கட்டளையிட்டிருந்தார்கள். கனவு வந்தால் அதை யாரிடமும் சொல்லக் கூடாது என்ற கட்டளையையும் சேர்த்து வழங்கியிருந்தார்கள். இந்தக் காலக்கட்டத்தில் எனக்கு பல கனவுகள் வந்தன. அதை நான் யாரிடமும் கூறியதில்லை. நான் கட்டடப் பணியைச் செய்து வந்தேன். வேலை கிடைக்காத காரணத்தால் நான் எனது முர்ஷிதிடம் அனுமதி பெற்று மனைவியுடன் அமிர்தசரஸ் சென்று விட்டேன். அங்கு ஒரு வாடகை வீட்டில் தங்கினேன். அங்கேயே வேலையும் செய்து வந்தேன். இரண்டு ஆண்டுகள் கழிந்த பின்னர் ஒருநாள் நான் தஹஜ்ஜுத் தொழுது விட்டு திக்ர் ஓதுவதில் ஈடுபட்டிருந்தேன். அப்போது எனக்கு தூக்கம் வந்தது. நான் தொழுகை விரிப்பில் படுத்து விட்டேன். கனவு பார்த்தேன். வானத்திலிருந்து மனித வடிவில் வானவர்கள் வந்து எனக்கு அக்கம் பக்கத்தில் கொஞ்சம் இடைவெளி விட்டு வட்டமாக அமர்ந்து கொண்டனர். தளபதி பதவியிலிருந்த ஒருவர் என் பக்கத்தில் வந்து அமர்ந்தார். அவர் அமர்ந்தவுடன் அலங்கரிக்கப்பட்ட சிம்மாசனம் வானத்திலிருந்து இறங்கியது. அந்த வட்டத்திற்குள் அந்த சிம்மாசனம் வைக்கப்பட்டது. இராணுவம் முழுவதும் மரியாதையின் நிமித்தமாக எழுந்து நின்றது. அப்போது அந்த சிம்மாசனத்தில் ஒருவருக்கொருவர் ஒத்த வடிவம் கொண்ட இரண்டு சான்றோர்கள் உட்கார்ந்தார்கள். அவர்களுக்கு எல்லா புறமும் ஒளியாகவே இருந்தது. அப்போது என் பக்கத்திலிருந்த அந்த தளபதியிடம் இந்த சான்றோர்கள் யார்? எனக் கேட்டேன். அப்போது அவர் வலது பக்கத்தில் இருக்கும் பெரியவர் இறைவனுக்கு மிகவும் விருப்பமான முஹம்மது (ஸல்) அவர்கள் ஆவார்கள். இடது பக்கம் இருப்பது முஹம்மது (ஸல்) அவர்களுக்கு விருப்பமான இப்னு மர்யமாவார் என்றார். நான் இப்னு மர்யம் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களின் பெயராகும். அவர் இஸ்ராயீலின் நபி ஆவார் என்றேன். அதற்கு அவர், இவர் அவரல்ல. அவரோ இறந்து விட்டார். இவர் முஹம்மது (ஸல்) அவர்களுக்கு மிகவும் பிரியமான இப்னு மர்யம் ஆவார் என்றார். அதன் பிறகு ரஸூலே கரீம் (ஸல்) அவர்கள் தமது அருள் மிகுந்த நாவினால் அந்த தளபதியிடம் நீ உரத்த குரலில் மக்களுக்கு நமது இப்னு மர்யம் வந்தால் அவரை பின்பற்றுவது உங்களுக்கு அவசியமாகும். அவரை பின்பற்றாதவர் என்னைச் சேர்ந்தவன் அல்ல என்று கூறுமாறு கட்டளையிட்டார்கள்.

அந்த சமயம் எனது மனைவி என்னை எழுப்பி சுபுஹ் தொழுகைக்கு பாங்கு சொல்லப்பட்டு விட்டது. நீங்கள் தஹஜ்ஜுத்திற்குப் பிறகு ஒருபோதும் தூங்கியது கிடையாது. எழுந்து தொழுகைக்காக பள்ளிவாசலுக்குச் செல்லுங்கள் என்றாள். நான் அப்போது என் மனைவியிடம் என்னை ஏன் எழுப்பினாய்? என்று மிகுந்த கோபம் அடைந்தேன். அடுத்த நாள் நான் ஊருக்குச் சென்றேன். எனது கனவில் கண்ட எல்லாவற்றையும் நான் எனது முர்ஷிதிடம் கூறினேன். அவர் உனக்கு ரஸூலே கரீம் (ஸல்) அவர்களை கனவில் சந்திக்கும் பாக்கியம் கிடைத்திருக்கிறது. வாழ்த்துக்கள் என்று கூறினார். பிறகு நாம் அந்நியர்களின் பகுதியில் இருப்போம். விரைவில் இப்னு மர்யம் இறங்குவார் என்றார். அதாவது அவர் கனவுக்கு இவ்வாறு விளக்கம் கொடுத்தார். இக்காலக்கட்டம் மஸீஹ் மவ்வூதின் காலக்கட்டமேயாகும். அவரை அடைந்தவர்கள் மிகுந்த பாக்கியசாலிகளாவர் என்று அந்த முர்ஷித் அவருக்கு பதிலளித்தார்.

அதன் பிறகு அவர் கூறுகிறார்: நான் நீர்ப்பாசனம் சம்பந்தப்பட்ட துறையில் கட்டுமானப்பணி செய்தேன். ஒரு கிளர்க் மூலமாக இந்தப் பணி எனக்கு கிடைத்தது. இந்நாட்களில் பல கனவுகள் வந்தன. பீர், முர்ஷித் கனவுகளை யாரிடமும் கூறக்கூடாது என்று கூறியதன் காரணமாக நான் யாரிடமும் சொல்லாமல் இருந்தேன். 15-20 வருடங்கள் வரை நான் பணியாற்றினேன். பிறகு வேலையை விட்டு விலகி எனது ஊருக்குத் திரும்பிச் சென்று விட்டேன். அங்கு என் வீட்டிலேயே வசித்து வந்தேன். எனவே எனது சகோதரரில் ஒருவரான மவ்லவி முஹம்மது சிராக் சாஹிப் எனக்கு ஆசிரியராகவும் இருந்தார். அவர் அஹ்லே ஹதீஸ் பிரிவில் மிகவும் உறுதியானவர் ஆவார். நான் வேலையை விட்டு திரும்பி வந்ததும் அவரை அஹ்மதி தரீக்காவைச் சேர்ந்தவராகக் கண்டேன். அதாவது அவர் அஹ்மதி ஆகியிருந்தார். அவர் என்னுடன் ஹஸ்ரத் சாஹிபின் ஜமாஅத்தைப் பற்றி பேச ஆரம்பித்தார். ஆனால் நான் அதில் ஆர்வம் காட்டவில்லை. ஏனெனில் நான் பக்கீர்மார்களை நம்பியிருந்தேன். பக்கீர்கள் தான் உண்மையான சரீஅத்திற்கு சொந்தக்காரர்கள் ஆவார்கள் என்று நான் நம்பியதன் காரணமாக மவ்லவி சாஹிபிற்கு எந்தப் பதிலையும் கூறவில்லை. ஆம், இந்தக் காலத்தில் மக்கள் இவ்வாறான வியாபாரத்தை நடத்துகின்றனர். அவர்கள் இறைவனின் படைப்பினங்களை ஏமாற்றுகின்றனர் என்று மட்டும் கூறினேன். எனவே எனது முர்ஷிதிடம் இதுபற்றி கேட்டு ஆராய வேண்டும் என்று நான் எண்ணினேன். ஹஸரத் சாஹிபின் இந்த வாதம் சரியா? அவர் இறைவன் புறமிருந்து வந்தவரா? அல்லது இது வெறும் ஏமாற்றமா? என்று கேட்டறிய வேண்டும் என்பதற்காக அவருடைய வீட்டிற்குச் சென்றேன். பீர் சாஹிபின் மகனிடம் ஹஸ்ரத் எங்கே? என்று கேட்டேன். அதற்கு அவர் அழுது கொண்டே முர்ஷித் இரண்டு மாதங்களுக்கு முன்பு இறந்து விட்டதாகக் கூறினார். அவரது மறைவுச் செய்தியை உங்களுக்கு தெரிவிக்க மறந்து விட்டோம். மன்னித்து விடுங்கள் என்றார். எனக்கு மிகவும் துக்கம் ஏற்பட்டது. துயரம் ஏற்பட்டது. நான் அழுது கொண்டே வீட்டிற்குத் திரும்பி விட்டேன்.

ஒருநாள் மீண்டும் மவ்லவி சாஹிப் என்னிடம் கூறினார். நீ படித்தவன் ஆவாய். ஹஸ்ரத் சாஹிபின் நூல்களைப் பார்க்க வேண்டும். அதாவது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் நூல்களைப் படிக்க வேண்டும் என்று கூறி, உடனடியாக ஒரு நூலைப் படிக்கக் கொடுத்தார். அதை நான் முழுவதுமாகப் படித்து முடித்தேன். பிறகு எனக்கு பராஹீனே அஹ்மதிய்யாவின் நான்கு பாகங்களையும் கொடுத்தார். அதையும் நான் முழுமையாக வாசித்தேன். உடனடியாக ஹஸ்ரத் முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்குப் பிறகு இவ்வாறு தகுதியான ஒரு மனிதர் யாரும் தோன்றவில்லை. மேலும் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்குப் பிறகு இப்படி இஸ்லாம் அல்லாத பிற எல்லா மதங்களுக்கும் இஸ்லாத்தின் உண்மையின்பால் அழைப்பு விடுக்கும் ஒரு நூலை யாரும் வெளியிட்டதும் இல்லை என்று என் உள்ளத்தில் போடப்பட்டது.

கூறுகின்றார்கள்: அதன் பிறகு என் உள்ளம் தடுமாற்றமடைந்தது. இவ்வாறு உலகத்திற்கு முன்னால் உண்மையை எடுத்துரைக்கும் இவர் உண்மையாளர் என்று நான் பைஅத் செய்தால், நான் உண்மையாளரிடம் பைஅத் செய்து விட்டேன் என்று கருதலாம். ஆனால் இவர் தமது வாதத்தில் பொய்யர் என்றால் இந்நிலையில் நான் ஒரு பொய்யரின் பைஅத்தில் இணைந்தவனாகி விடுவேனே! என்று தோன்றியது. இவ்வாறு இரண்டு மாதங்கள் வரை நான் கழித்தேன். மவ்லவி சாஹிப் எனக்கு எல்லா வகையிலும் புரிய வைத்தார்கள். ஆனால் உள்ளம் ஏற்கவில்லை. ஒருமுறை ரமலான் மாதத்தின் முதல் தேதியன்று நான் இறைவனிடம் மிகவும் பணிவுடனும், உருக்கத்துடனும் துஆ செய்தேன். வானங்களையும் பூமியையும் படைத்தவனே! முஹம்மது (ஸல்)

அவர்களுக்காக, இந்த நபர் அதாவது மிர்ஸா சாஹிப் உண்மையாளர் என்றால் இவரை சீர்திருத்தவாதியாக அனுப்பி இருக்கின்றாய் என்றால், நீ எனக்கு உன் புறமிருந்து வெளிப்படையாகவோ அல்லது கனவின் மூலமாகவோ அடையாளம் காட்டுவாயாக! எனக்கு நீ அடையாளம் காட்டா விட்டால் கியாமத் நாளின் போது எனக்கு எதிராக உன்னிடம் எந்த ஆதாரமும் இருக்காது. ஏனெனில் உண்மையாளர் மற்றும் பொய்யர் யார்? என்று பிரித்தறியும் சக்தி என்னிடம் இல்லை. அவ்வளவுதான் என்று துஆ செய்தேன்.

ரமலான் 15 நாட்கள் கழிந்த பிறகு நான் தஹஜ்ஜுத் தொழுகைக்குப் பின் ஒருமுறை தொழுகை விரிப்பில் படுத்துத் தூங்கி விட்டேன். அப்போது கனவு கண்டேன். நானும் என்னுடன் ஒரு நபரும் ஒரு ஊருக்குப் போய்க் கொண்டிருக்கின்றோம். வழியில் ஒரு தோட்டம் தெரிகிறது. அதன் சுற்றுச்சுவர் ஏறக்குறைய மூன்று அடி உயரமாக இருக்கிறது. அந்தச் சுவருக்குப் பக்கத்தில் சென்று பார்க்கிறோம். அந்தத் தோட்டம் சொர்க்கத்தின் முன்னுதாரணம் போன்று இருக்கிறது. அதில் ஆறுகள் ஓடுகின்றன. ஆனால் தண்ணீர் இல்லாமல் காய்ந்துள்ளது. அதில் கொஞ்சம் கொஞ்சம் தண்ணீர் ஒடிக் கொண்டிருப்பது தெரிகிறது. அதில் மிகவும் உயரமான அரண்மனைகள் உள்ளன. அந்தத் தோட்டத்திற்குள் சென்று சுற்றிப் பார்க்க வேண்டும் என்று நாங்கள் இருவரும் எண்ணினோம். எனவே நாங்கள் இருவரும் அதன் சுற்றுச் சுவரைத் தாண்டி உள்ளே செல்ல நாடினோம். ஆனால் நாங்கள் மிகவும் கடினமாக முயற்சித்தும் சுற்றுச் சுவரைத் தாண்டி உள்ளே செல்ல முடியவில்லை.

அவர் தனது நீண்ட கனவைக் கூறுகிறார்: பிறகு கண்டிப்பாக உள்ளே செல்ல வேண்டும் என்று உறுதி கொண்டோம். இதன் கதவு எங்கிருக்கிறது? என்று கண்டுபிடிக்கலாம் என்று கூறி அந்தத் தோட்டத்தின் மூன்று பக்கத்தில் அதாவது, தெற்கு, மேற்கு மற்றும் வடக்கு ஆகிய திசைகளில் தேடிப் பார்த்தும் அதன் கதவு கிடைக்கவில்லை. பிறகு கிழக்குத் திசையை நோக்கி செல்லலாம். ஒருவேளை அந்தப் பக்கம் இதன் கதவு நமக்கு கிடைக்கலாம் என்று கூறி, அந்தத் தோட்டத்தின் கிழக்குத் திசையின் பக்கம் சென்றோம். அங்கு ஒரு மரத்தின் நிழலில் ஒரு பெரியவர் உட்கார்ந்திருந்ததைப் பார்த்தோம். அந்தப் பெரியவர் தம் கையின் சைகையால் எங்களை அழைத்துக் கொண்டிருந்தார். இங்கே வாருங்கள். இதன் கதவு பற்றி நான் உங்களுக்குக் கூறுகிறேன். நீங்கள் வரவில்லை என்றால் வாழ்நாள் முழுவதும் உங்களுக்குத் தோட்டத்தின் கதவு கிடைக்காது என்று கூறி அழைத்தார். நாங்கள் அந்தப் பெரியவரிடம் சென்றவுடன் வெகு நாட்களுக்கு முன்பு அமிர்தசரஸில் வைத்து வந்த கனவு எனக்கு நினைவுக்கு வந்தது. நான் உள்ளத்தில் கூறுகிறேன். இந்தப் பெரியவரைத் தான் நான் ரஸூல் (ஸல்) அவர்களுடன் சிம்மாசனத்தில் கனவில் கண்டேன். அவரிடம் ஹஸ்ரத் நீங்கள் யார்? என்று கேட்டேன். அப்போது அவர் நான் இப்னு மர்யம் ஆவேன். அங்கே பாருங்கள். தோட்டத்தின் கதவு உள்ளது. உள்ளே சென்று சுற்றிப் பாருங்கள் என்று கூறினார். நாங்கள் இருவரும் தோட்டத்தினுள் சென்றோம். முழுவதும் சுற்றிப் பார்த்தோம். எதார்த்தமாக எனக்கு தாகம் ஏற்பட்டது. என்னுடன் இருந்த நபரிடம் எனக்குத் தாகமாக இருக்கிறது. ஆற்றின் தண்ணீர் மிகவும் தாழ்ந்துள்ளது. கை எட்டாது; என்ன செய்வது? என்றேன். நாங்கள் களைப்படைந்து ஒரு மரத்தின் கீழ் அமர்ந்தோம். சிறிது நேரம் கழித்து ஒரு பையன் 10-12 வயது உடைய சிறுவன் ஒரு அரண்மனையிலிருந்து வெளியே வந்தான். அவனது கையில் முட்டை வடிவ கிண்ணம் ஒன்று இருந்தது. அதாவது நீள் வட்ட வடிவில் இருந்தது. அதில் ஏதோ ஒன்று இருந்தது. அதைக் கொண்டு வந்து எனது கையில் வைத்து விட்டான். இதை குடி என்று கூறினான். எனக்கு தாகமாக இருந்ததால் அந்தக் கிண்ணத்தை அவனிடமிருந்து வாங்கி அதிலிருந்து ஏறக்குறைய பாதி அளவு குடித்தேன். மீதியைக் களைப்பாக இருந்த என் நண்பருக்குக் கொடுத்தேன். அந்தப் பையன் அவரிடமிருந்து அந்தக் கிண்ணத்தைப் பிடுங்கி என்னிடம் கொடுத்து இது உனது பங்காகும். கனவில் அவருடன் இருந்த அந்த நபருக்கு இதில் பங்கில்லை என்று கூறினான். இதனால் என்னுடன் இருந்த நபர் வெட்கப்பட்டு, நேரம் அதிகமாகி விட்டது. நாம் இன்னும் நெடுந்தூரம் செல்ல வேண்டும்; போகலாம் என்றார். எனவே நாங்கள் வேகமாக கதவின் பக்கம் வந்தோம். எனது நண்பர் விரைவாக கதவை விட்டு வெளியே சென்று விட்டார். நான் உள்ளேயே இருந்த நிலையில், மவ்லவி சாஹிபின் மகன் வந்து என்னை எழுப்பி, நீங்கள் தஹஜ்ஜுத்திற்குப் பிறகு திருக்குர்ஆனின் மன்ஸில் ஓதாமல் இன்று தூங்கி விட்டீர்கள் என்ன காரணம்? என்றார். நான் அவரிடம் கோபப்பட்டு நான் இப்போது அழகான கனவு கண்டு கொண்டிருந்தேன். நீ மிகவும் மோசமான காரியம் செய்திருக்கிறாய். என்னை எழுப்பி விட்டாயே! என்றேன். அவர் இறைவனின் அடியாரே! சுபுஹ் பாங்கு சொல்லப்பட்டு விட்டது. மவ்லவி சாஹிப் பள்ளிவாசலில் ஜமாஅத்திற்காக காத்திருப்பார்கள். வாருங்கள்! தொழலாம் என்று கூறினார்.

எனவே நாங்கள் பள்ளிவாசலுக்குச் சென்றோம். உளூ செய்து விட்டு மவ்லவி சாஹிபுடன் ஜமாஅத்தாக தொழுதேன். தொழுது முடித்தவுடன் நான் கனவின் நிலைகளையும் இறைவனிடம் துஆ செய்ததையும், இறைவன் கனவில் எல்லாவற்றையம் காண்பித்தான் என்ற அனைத்தையும் நான் மவ்லவி சாஹிபிடம் எடுத்துக் கூறினேன். இவ்விரண்டு கனவுகளைத் தவிர நான் ஹஸ்ரத் மிர்ஸா சாஹிப் எனது முழு வாழ்நாளிலும் ஒருபோதும் நேரில் கண்டதே இல்லை. நான் காதியானுக்கு இதுவரை சென்றதும் இல்லை என்றேன்.

எனவே இந்தக் கனவை நான் கூறியதும் மவ்லவி சாஹிப் அதன் விளக்கமாகக் கூறினார்கள். நீங்கள் தோட்டத்தையும் அதில் வறண்ட நதிகளையும், மாளிகைகளையும் கண்டிருக்கிறீர்கள். இதன் பொருள், சரீஅத்தின் தோட்டமாகும். நதிகள் இக்காலத்தின் ஆலிம்களாவர். அவர்கள் வறண்டு போய் விட்டனர். அவர்களிடம் இப்போது எந்த அறிவுமில்லை. இவர்களிடம் அசல் சரீஅத் இல்லை. மாளிகைகள் மற்றும் கிண்ணம் ஆகியவை செயல்களைக் குறிக்கிறது. அதில் சில தவறுகள் உள்ளன. அது முட்டை வடிவில் இருக்கிறது. அதாவது நேராக இல்லை. மேலும் கனவில் கிழக்கை நோக்கி சைகை காட்டப்பட்டுள்ளது. அது நமது ஊரிலிருந்து காதியான் நேர் கிழக்கில் உள்ளது என்பதை சுட்டிக் காட்டுகிறது. கிழக்கு என்று வரும் ஹதீஸையும் புரிந்து கொள்ளுங்கள். அதாவது மஸீஹ் கிழக்கே இறங்குவார் என்ற ஹதீஸை இது சுட்டிக் காட்டுகிறது. மேலும் நீங்கள் அடையாளமிட்டுக் காட்டிய அந்தப் பெரியவர் ஹஸ்ரத் மிர்ஸா குலாம், இமாம் மஹ்தி மற்றும் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஆவார்கள். கையால் சைகை காட்டியதன் பொருள், இந்த ஜமாஅத்தில் இணையாத வரை சரீஅத்தே இஸ்லாம் மற்றும் சொர்க்கத்தின் வாசலைப் பற்றி முழுமையாக எங்கும் தகவல் கிடைக்காது என்பதாகும். நீங்கள் இறைவனிடம் அடையாளம் கேட்டீர்கள். எனவே இறைவன் இந்த அடையாளத்தை உங்களுக்கு காட்டி விட்டான்.

பிறகு அவர்கள் கூறினார்கள்: நாம் வெள்ளிக்கிழமை அன்று காதியானுக்கு செல்லவிருக்கிறோம். நீங்களும் எங்களுடன் வாருங்கள். உங்களுடைய கனவின்படி அந்தப் பெரியவர் ஹஸ்ரத் சாஹிப் ஆக இருந்தால் ஏற்றுக் கொள்ளுங்கள். இல்லையென்றால் எந்தக் கட்டாயமும் இல்லை என்றார்கள். இவ்வாறு நாங்கள் வியாழக்கிழமை அன்று காதியானுக்கு புறப்பட்டோம். நாங்கள் காதியானுக்குச் சென்று சேர்ந்த நேரத்தில் எனக்கு கடுமையான காய்ச்சல் ஏற்பட்டது. மவ்லவி சாஹிப், ஹஸ்ரத் சாஹிபிடம் எனது ஊரைச் சேர்ந்த ஒருவர் சத்தியத்தைத் தேடி இங்கு வந்துள்ளார். அவர் நோன்பு வைத்திருந்தார். எனவே காய்ச்சல் வந்து விட்டது என்று கூறினார்கள். ஹஸ்ரத் சாஹிப் என்னைப் பார்த்து மவ்லவி சாஹிப், நீங்கள் ஏன் அவரை நோன்பு வைத்துக் கொண்டு பயணம் செய்ய வைத்தீர்கள்? வழியில் காய்ச்சலோ அல்லது வேறு நோய் ஏதாவது ஏற்பட்டிருந்தால் நீங்கள் என்ன செய்வீர்கள்? இது திருக்குர்ஆனுக்கு மாற்றமானதாகும். சரி, நாம் மருந்து கொடுத்து அனுப்புகிறோம். இன்சா அல்லாஹ் நிவாரணம் கிடைத்து விடும் என்று கூறினார்கள். மருந்து வந்தது. ஹாமித் அலி சாஹிப் கொண்டு வந்தார்களா? அல்லது வேறு யார் கொண்டு வந்தார் என்று தெரியவில்லை. நான் மருந்து குடித்தேன். காய்ச்சல் குணமாகி விட்டது. காய்ச்சலின் மயக்க நிலையில் நான் அப்போது ஹஸ்ரத் சாஹிபை சரியாக அடையாளம் காண முடியவில்லை.

அடுத்த நாள் வெள்ளிக்கிழமையாக இருந்தது. நாங்கள் உளூ செய்து விட்டு விரைவாக முதல் வரிசையில் இடம் கிடைக்க வேண்டும் என்பதற்காக முன்னதாகவே சென்று விட்டோம். முதல் வரிசையில் இடம் கிடைத்து விட்டது. முதலில் மவ்லவி அப்துல் கரீம் சாஹிப், அதன் பிறகு மவ்லவி சாஹிப் அதாவது முதல் கலீஃபத்துல் மஸீஹ் ஆகியோர் வந்தனர். அவர்களுக்குப் பிறகு ஹஸ்ரத் மிர்ஸா சாஹிப் வருகை தந்தார்கள். நான் அவர்களைப் பார்த்தவுடன் அடையாளம் கண்டு கொண்டேன். இவர் தான் நான் கனவில் கண்ட பெரியவர் ஆவார். நான் எனது மவ்லவி சாஹிபிடம் கூறி விட்டேன். இவர்தான் இப்னு மர்யம் ஆவார். இவரைத் தான் நான் இரண்டு முறை கனவில் கண்டேன். மவ்லவி சாஹிபிற்கு திருப்தி ஏற்பட்டு விட்டது. இனி இவரே பைஅத் செய்து விடுவார் என்று எண்ணினார்கள். ஆம், நாங்கள் காதியானுக்கு புறப்பட்ட போது நான்கு பேர் இருந்தோம். ஒன்று நான், இரண்டு மவ்லவி சாஹிப், மூன்றாவது எனது கனவில் என்னுடன் இருந்த அந்த நபர் ஆவார். நான்காவது நபர் மண்பான்டங்கள் செய்யும் ஒருவர் ஆவார். அவர் பைஅத் செய்வதற்காக வந்தார். ஆக, மவ்லவி அப்துல் கரீம் சாஹிப் குத்பா ஓதினார்கள். ஜுமுஆவும் அவரே தொழ வைத்தார் என்றுதான் நினைக்கிறேன். எனவே ஜுமுஆ தொழுகைக்குப் பிறகு பைஅத் செய்பவர்கள் வந்து பைஅத் செய்யலாம் என்று குரல் கொடுக்கப்பட்டது. அன்று பலர் பைஅத்திற்காக வந்திருந்தனர். அவர்களில் எங்களுடன் வந்த அந்த நான்காவது நபர்

மண்பான்டங்கள் செய்பவரும் இருந்தார். நாங்கள் பைஅத் செய்வதற்காக சென்ற போது, எனது கனவிலும் என்னுடன் இருந்த அந்த நபர் பைஅத் செய்வதை விட்டு என்னைத் தடுத்தார். எனது உள்ளத்தில் யூகங்களை ஏற்படுத்தினார். நீர் ஹஸ்ரத் சாஹிபின் நூல்களைப் படிக்கின்றீர். எனவே அதே சிந்தனைகள் கனவு வடிவில் தோன்றியுள்ளன. வேறு எதுவும் இதில் உண்மை கிடையாது. உனது கனவு தவறான கனவாகும் என்று கூறி யூகங்களை ஏற்படுத்தினார். இவ்வனைத்தும் வெறும் ஏமாற்றமாகும் என்று கூறினார். நான் அறிவில் மிகவும் பலவீனமானவன் ஆவேன். அதாவது இதன் காரணமாக அவர் என்னை பைஅத் செய்வதை விட்டும் தடுத்தார்.

எனவே நாங்கள் அடுத்த நாள் அதிகாலையில் நால்வரும் காதியானிலிருந்து ஊருக்குத் திரும்பினோம். பட்டாலாவிலிருந்து அலி வால் என்ற ஊருக்குச் செல்லும் சாலையில் மோலே வால் வரை சென்றதும் நீ பைஅத் செய்து விட்டாயா? என்று மவ்லவி சாஹிப் என்னிடம் கேட்டார்கள். நான் இல்லை என்று பதில் கூறினேன். ஏன் பைஅத் செய்யவில்லை? என்று கேட்டார்கள். உனக்கு உனது கனவின் படி எல்லாம் நிறைவேறி விட்டது. பிறகு ஏன் பைஅத் செய்யவில்லை? என்று கேட்டார்கள். நான் அவரிடம், இந்த நபர் என்னைத் தடுத்தார். நீ மிர்ஸா சாஹிபின் நூல்களைப் படிக்கின்றாய். எனவே அந்த சிந்தனைகள் யாவும் கனவின் வடிவில் உனக்கு தோற்றமளித்துள்ளது. வேறு எதுவும் இல்லை என்று கூறினார் என்றேன். இதைக் கேட்டதும் மவ்லவி சாஹிப் என்னிடமும் அந்த நபரிடமும் அவர் மவ்லவி சாஹிபின் சிறிய தந்தையின் மகன் ஆவார். மிகவும் கோபமடைந்தார்கள். என்னிடம், இனி எனக்கும் உனக்கும் ஆசிரியர் – மாணவர் உறவு அல்லது வேறு எந்த உறவும் கிடையாது என்று கூறினார்கள். நாங்கள் அஸர் தொழுகையின் நேரத்தில் எங்களது ஊருக்கு வந்து சேர்ந்தோம். அதன் பிறகு நான் 4–5 நாட்களாக ஊரில் இருந்தேன். ஆனால் மவ்லவி சாஹிப் எம்மிடம் கோபமாகவே இருந்தார்கள். தற்செயலாக மேஸா பாம்படில் இருந்து எனக்கு பாபு ஜான் முஹம்மதுவின் கடிதம் வந்தது.

நான் பணிமாற்றம் அடைந்து கோட்டி ஹைதர், ஹர்ச்வாலுக்கு வந்து விட்டேன். என்னிடம் வேலை அதிகமாக இருக்கிறது. நீங்கள் வேலையை விட்டு வந்து விட்டீர்கள் என்று கேள்விப்பட்டேன். எனவே கடிதம் கிடைத்ததும் மோஸா பாம்படி அல்லது கோட்டி ஹர்ச்வால்க்கு கண்டிப்பாக வாருங்கள் என்று எழுதியிருந்தார். எனது உள்ளமும் சற்று கவலையடைந்திருந்தது. எனவே கடிதம் கிடைத்த மறுநாள் ஹர்ச்வால் ஆற்றின் பங்களாவிற்கு காதியான் வழியாக சென்று சேர்ந்தேன். பாபு சாஹிப் மிகவும் மகிழ்ச்சியுடன் என்னை உபசரித்தார்கள். அடுத்த நாள் என்னிடம் பணி ஒப்படைக்கப்பட்டது. நானும் பணிகளில் மூழ்கி விட்டேன். மூன்றாவது நாள் எனக்கு மூன்றாவது கனவு வந்தது. அந்தக் கனவில் ஹஸ்ரத் மிர்ஸா சாஹிப் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் என் அருகில் வந்து உட்கார்ந்தார்கள். நான் மரியாதையின் நிமித்தமாக பெரியவர்களின் மரபுப்படி காலை முத்தமிடுவதற்காக எனது தலையைக் கவிழ்த்தினேன். ஆனால் ஹஸ்ரத் சாஹிப் தங்களது அருளுக்குரிய கரங்களால் என்னை அவ்வாறு செய்வதிலிருந்து தடுத்தார்கள். இது ஷிர்க் ஆகும் என்று கூறினார்கள். பிறகு மியான் ஃபஸ்ல் தீன்! பாரும்! நீர் இறைவனிடம் துஆவின் மூலமாக அடையாளத்தைக் கேட்டீர். எனக்கு வெளிப்படையாகவோ அல்லது கனவின் மூலமாகவோ அடையாளம் காண்பிக்கா விட்டால் கியாமத்தில் மஸீஹ் மவ்வூதை ஏன் ஏற்றுக் கொள்ளவில்லை? என்று கேட்பதற்கு இறைவா! எனக்கு எதிராக உன்னிடம் ஆதாரம் இருக்காது என்று நீர் துஆ செய்தீர். எனவே இப்போது உமக்கு அடையாளம் கிடைத்து விட்டது. உம் மீது ஆதாரங்கள் பூர்த்தியாகி விட்டன. இந்த அளவிற்கு மட்டும் பேசி விட்டு அவர்கள் சென்று விட்டார்கள்.

நான் கனவிலிருந்து விழித்தெழுந்து அழ ஆரம்பித்தேன். கண்ணீரால் எனது சட்டை நனையும் அளவிற்கு அழுதேன். அந்த தருணமே நான் பாபு சாஹிபிற்கு தகவல் தெரிவிக்காமல் வெறும் காலால் எழுந்து ஓடினேன். செறுப்பு கூட அணியவில்லை. ஒரு நபர் நான் இவ்வாறு ஓடிக் கொண்டிருப்பதைப் பார்த்து பாபு சாஹிபிடம் சென்று மேஸ்திரி சாஹிப் தம் ஊருக்கு ஓடிக் கொண்டிருக்கிறார் என்று கூறி விட்டார். உடனே பாபு சாஹிப் குதிரையை ஓட்டிக்கொண்டு என்னை பின்தொடர்ந்தார்கள். என்னை ஹர்ச்வால் ஆற்றுப் பாலத்தில் வைத்து பிடித்து விட்டார். உங்களுக்கு என்ன ஆயிற்று? அனுமதி வாங்காமல் உங்கள் ஊருக்கு ஓடிக் கொண்டிருக்கிறீரே! நலம் தானா? என்று கேட்டார். நான் என்னை விட்டு விடுங்கள். நான் காதியானுக்குப் போய்க் கொண்டிருக்கிறேன். எனது ஊருக்குச் செல்லவில்லை என்றேன். காதியானின் பெயரைக் கேட்டவுடன் அவர் கொதித்தெழுந்தார். ஏனெனில் அவர் எதிரியாவார். இன்னும் எதிர்த்துக் கொண்டேயிருக்கிறார். அவர் என்னை

விடவில்லை. நான் மிகவும் பணிவுடன் பாபு சாஹிப்! என்னைப் போக விடுங்கள். இல்லையென்றால் நான் இங்கேயே உயிரை விட்டு விடுவேன். ஏனெனில் இது எனது கட்டுப்பாட்டில் இல்லை. ஏதோ ஒரு சக்தி என்னை வலுக்கட்டாயமாக இழுத்துக் கொண்டு போகிறது. நான் மூன்று நாளுக்குப் பிறகு பணியில் ஆஜராகி விடுவேன் என்று உறுதி அளிக்கிறேன் என்று கூறினேன். அவர் என்னை விட்டு விட்டார்.

நான் மிர்ஸா சாஹிப் உண்மையாளர் ஆவார் என்று கூறிக் கொண்டிருந்தேன். எனது உள்ளத்தின் கருத்துக்களை அவர்கள் கூறினார்கள். உன் மீது அத்தாட்சி நிறைவடைந்து விட்டது என்று கூறி விட்டார்கள். எனவே நான் காதியானுக்கு வந்து விட்டேன். இப்போது புத்தக மண்டி உள்ள இடத்தின் பின்னால் அச்சகம் இருந்தது. கிணற்றிற்கு அருகில் முஹம்மது இஸ்மாயில் அச்சகத்தில் வேலை பார்த்துக் கொண்டிருந்தார். அவரிடம் நான் மிர்ஸா சாஹிபை சந்திக்க வேண்டும் என்று கூறினேன். அவர், ளுஹர் தொழுகைக்காக முபாரக் பள்ளிவாசலுக்கு வருவார்கள். அங்கு நீங்கள் சந்தித்துக் கொள்ளுங்கள் என்றார். அன்று அவர்கள் ளுஹர் தொழுகையில் வரவில்லை. மக்ரிப் நேரத்தில் அவர்கள் வருகை தந்தார்கள். நான் அவர்களை சந்தித்தேன். ஹுஸுர் நான் பைஅத் செய்ய வேண்டும் என்றேன். ஹுஸுர் மூன்று நாளுக்குப் பிறகு பைஅத் வாங்கப்படும் என்று கூறினார்கள். நான் மூன்று நாள் வரை அங்கு தங்கினேன். மூன்றாம் நாள் நான் மீர் காஸிம் அலி சாஹிப், ஃபாரூக் பத்திரிகையின் ஆசிரியர் மற்றும் மூன்றாவது வேறொருவர் இருந்தார். அவரது பெயர் எனக்கு நினைவில் இல்லை. ஸெய்யது சர்வர் சா சாஹிப் ஆக இருக்கலாம் என்று நினைக்கிறேன். நாங்கள் பைஅத் செய்தோம். இவ்வாறு ஜமாஅத்தே அஹ்மதிய்யாவில் நான் இணைந்தேன்.

அல்லாஹ் இவ்வாறும் மக்களை பைஅத் செய்ய வைத்தான். மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்: நமது தப்லீகிற்கான பல பணிகளை வானவர்கள் செய்கிறார்கள் என்று கூறினார்கள். அல்லாஹ் இந்த எல்லா சஹாபாக்களின் தர்ஜாவை உயர்த்திக் கொண்டே இருப்பானாக! அவர்களின் சந்ததிகளுக்கு இவர்களின் நன்மைகளை தக்க வைத்துக் கொள்ளும் நல்வாய்ப்பினை வழங்குவானாக!

இப்போது நான் ஒரு சஹீதைப் பற்றி அறிவிக்க விரும்புகிறேன். இவரது ஜனாஸாவை ஜும்ஆ தொழுகைக்குப் பிறகு தொழ வைப்பேன். இவர் மதிப்பிற்குரிய சவுத்ரி நுஸ்ரத் மஹ்மூது சாஹிப் ஆவார். இவர் சவுத்ரி மன்ஸுர் அஹ்மது சாஹிபின் மகன் ஆவார். இவரது குடும்பத்தில் அஹ்மதிய்யத் சவுத்ரி இனாயத்துல்லாஹ் சாஹிப் (ரலி) அவர்கள் மூலமாக கிடைத்தது. இவர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் சஹாபி ஆவார்கள். இவர் சஹீத் மர்ஹூமின் பாட்டனார் சவுத்ரி இக்லாஸ் அஹ்மது சாஹிபின் மைத்துனர் ஆவார். இவரது முயற்சியினால் பிற்காலத்தில் சவுத்ரி இக்லாஸ் அஹ்மது சாஹிப் அவர்களும் முதல் கலீஃபாவின் காலத்தில் பைஅத் செய்தார்கள். இவரது குடும்பம் ஸியால்கோட் மாவட்டத்தின் பெல்வால்பூர் ஊரைச் சேர்ந்ததாகும். சவுத்ரி நுஸ்ரத் சாஹிப் ஏறக்குறைய 30 வருடங்களாக மண்டி பஹாவுத்தீனில் வசித்து வந்தார்கள். 2008 ஆம் ஆண்டு தமது மனைவி மற்றும் சிறிய மகளுடன் லாங்க் ஐலண்ட், நியூயார்க், அமெரிக்காவில் சென்று அங்கு வாழ்ந்து வந்தார்கள். நுஸ்ரத் மஹ்மூது சாஹிப் மார்ச் 6, 1949 ஆம் ஆண்டு ஸியால்கோட் மாவட்டத்தின் பெல்வால்பூரில் பிறந்தார்கள். பிறகு ஸியால்கோட்டின் மர்ரே கல்லூரியில் பட்டப்படிப்பு முடித்தார்கள். பிறகு மண்டி பஹாவுத்தீனிலுள்ள சர்க்கரை ஆலையில் பணி புரிந்தார். ஏறக்குறைய 35 வருடங்கள் மேனேஜராக பணியாற்றினார். பிறகு நான் ஏற்கனவே குறிப்பிட்டதன்படி அவர் அமெரிக்காவிற்கு இடம்பெயர்ந்து போய் விட்டார்.

செப்டம்பரில் இவர் தமது இளைய மகள் சாஹிஸா மஹ்மூதா சாஹிபாவின் திருமணத்திற்காக அமெரிக்காவிலிருந்து பாகிஸ்தான் வந்தார்கள். அக்டோபர் 5, 2012 அன்று சாஹிஸா மஹ்மூதாவின் திருமணம் ஸாத் ஃபாரூக் சாஹிப் சஹீதுடன் ஆனது. இவர் திருமணத்திற்குப் பிறகு மூன்றாவது நாளே சஹீதாக்கப்பட்டார். இவர் ஃபாரூக் அஹ்மது சாஹிப் காஹ்லூனின் மகன் ஆவார். அக்டோபர் 19 ம் தேதி அன்று ஜும்ஆ நாளில் ஸாத் ஃபாரூக் சாஹிப் சஹீதானார்கள் என்று அவர்களின் ஜனாஸாவை அறிவிக்கும் போது கூறினேன். இவருடைய இரண்டாவது சம்மந்தி ஃபாரூக் அஹ்மது காஹ்லூன் சாஹிப் மற்றும் இன்னும் சிலர் பைத்துல் ஹம்து பள்ளிவாசல், பல்தியா டவுணில் ஜும்ஆ தொழுகையை முடித்து விட்டு வீட்டிற்கு திரும்பி வந்து கொண்டிருந்தார்கள். அப்போது அடையாளம் தெரியாத நபர்கள் இவர்கள் மீது துப்பாக்கியால் சுட்டனர். ஸாத் ஃபாரூக் சாஹிப் மோட்டார் சைக்கிளில் இருந்தார்கள். அவர் சம்பவ இடத்திலேயே சஹீதாகி விட்டார். அவரது ஜனாஸா 2-3 வாரங்களுக்கு முன்பு நடந்தது. இன்னும் இரண்டு பேர் காயமடைந்தார்கள்.

சவுத்ரி நுஸ்ரத் மஹ்மூது சாஹிபிற்கு கழுத்தில் ஒரு தோட்டாவும், நெஞ்சில் இரண்டு தோட்டாக்களும் பாய்ந்தன. உடனடியாக மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டார். முதலில் அப்பாஸி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்கள். பிறகு ஆகா கானுக்கு மாற்றப்பட்டார். ஏறக்குறைய 38 நாட்கள் இவர் சிகிச்சை பெற்று வந்தார். இறுதியில் காயங்களை தாங்க முடியாமலும், மேலும் காயங்கள் மோசமடைந்ததன் காரணமாகவும் நவம்பர் 27 அன்று செவ்வாய் கிழமை இரவு 11.00 மணிக்கு இவர் இறைவனடி சேர்ந்தார். சஹாதத்தின் உயர் பதவியை அடைந்தார். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன்.

சஹீத் மர்ஹூம் அல்லாஹ்வின் அருளால் வஸிய்யத் செய்தவராவார். இவருக்கு மார்க்கத் தொண்டாற்றுவதில் எல்லையில்லா ஆர்வம் இருந்தது. மண்டி பஹாவுத்தீனில் வசிக்கும் போது இவர் ரிஷ்தா நாத்தா செயலராகவும், தஃவத்தே இலல்லாஹ் செயலராகவும் இன்னும் பல்வேறு பொறுப்புகளில் இருந்து தொண்டாற்றும் நல்வாய்ப்பு கிடைத்தது. 2008 –ல் அமெரிக்காவுக்கு இடம்பெயர்ந்து சென்ற பிறகு, லாங்க் ஐலண்ட் நியூயார்க், அமெரிக்காவில் தர்பிய்யத் செயலர் பொறுப்பிலிருந்து தொண்டாற்றும் நற்பாக்கியம் கிடைத்திருந்தது.

மர்ஹூம் மிகவும் தூயவர். நேர்மையான பண்புக்கு சொந்தக்காரர் ஆவார். அவர் பணிபுரிந்து வந்த இடத்தில் Honesty Award ஒருமுறை இவருக்கு கிடைத்தது. கிலாஃபத்துடன் ஆழமான தொடர்பு இருந்தது. எல்லா வித சந்தாக்களிலும் முந்திக்கொண்டு பங்கெடுப்பவர் ஆவார். தஃவத்தே இலல்லாஹ்வின் நிகழ்ச்சியில் சுயமாக பங்கெடுக்க முடியாவிட்டால் தமது வண்டியை கொடுப்பார். இதனால் நற்கூலி கிடைப்பதற்காக அவ்வாறு செய்வார்.

இவரது மகன் காஷிஃப் அஹ்மது தானிஷ், இவரைப் பற்றி எழுதுகிறார்: எனது தந்தையை நான் மிகவும் அன்பானவராகவும், நேசிக்கும் ஒரு மனிதராகவும் கண்டேன். குழந்தைப் பருவத்திலிருந்து இளமைப்பருவம் வரை எப்போதும் தமது பிள்ளைகளை அதிகமாக கவனித்து வந்தார்கள். கல்வி புகட்டுவதற்காகவும் உயர்ந்த நல்லொழுக்கத்தில் நிலைபெற வைப்பதற்காகவும் எப்போதும் முயற்சி செய்து வந்துள்ளார். அவரது பேச்சு உயர்தரம் வாய்ந்ததாகவும் மிருதுவாகவும் இருக்கும். ஒருபோதும் குழந்தைகளை நீ என்று கூறி அழைத்ததில்லை. நீங்கள் என்றே அழைப்பார்கள்.

இவரது மகன் கூறுகிறார்: நான் ஜமாஅத் பணிகளில் ஈடுபடுவதை மிக அதிகமாக பாராட்டுவார்கள். கிலாஃபத்தே அஹ்மதிய்யாவுடன் ஒரு உறுதியான தொடர்பு இருக்க வேண்டும் என்று வலியுறுத்துவார்கள். வீட்டிற்கு வந்தால் முதலில் குழந்தைகளின் தொழுகையைப் பற்றி கேட்பார்கள். ஏதாவது காரணத்தால் தொழாமல் இருந்தால் உடனே தொழுமாறு கூறுவார்கள். குழந்தையாக இருந்த போது அவர்கள் தம்முடன் எங்களை தொழுகைக்காக அழைத்துச் செல்வார்கள். வேலை பார்த்துக் கொண்டிருக்கும் போது அல்லது பயணத்தில் இருந்தாலோ எங்கிருந்தாலும் தொழுகையைக் குறிப்பாகப் பேணுவார்கள். யாரிடமும் கடினமான தொனியில் பேசியதே இல்லை. எப்போதும் நல்லொழுக்கம் தொடர்பாக போதிப்பார்கள். எல்லாரும் அவரது மிருதுவான பேச்சு மற்றும் நடிவடிக்கையால் விரைவாக அவரது பக்கம் ஈர்க்கப்படுவர்.

மர்ஹூமின் மனைவி இப்போது அமெரிக்காவில் இருக்கிறார். இங்கு வந்திருந்தார்கள். ஆனால் உடல்நலம் சரியில்லாததால் சென்று விட்டார்கள். அவர்களுக்காகவும் அங்கு சிகிச்சை நடைபெற்று வருகிறது. அவர்களுக்காக துஆ செய்யுங்கள். அல்லாஹ் அவர்களுக்கும் ஷிஃபாவை வழங்குவானாக! அவரது மகன் காஷிஃப் அஹ்மது தானிஷ் கனடாவில் வசிக்கிறார். அங்கு கனடாவின் நாயிப் சதர் குத்தாமுல் அஹ்மதிய்யா என்ற பொறுப்பிலிருந்து தொண்டு செய்வதற்குரிய பாக்கியத்தை பெற்று வருகிறார். மர்ஹூமுக்கு மூன்று மகள்கள் உள்ளனர். இளைய மகள் ஸாத் ஃபாரூக் சாஹிபின் பிரிவால் விதவையாகி உள்ளார்கள்.

முஹம்மது முனீர் சம்ஸ் சாஹிப் ஏறக்குறைய 11 வருடங்கள் மண்டி பஹாவுத்தீனில் முரப்பி ஆக இருந்துள்ளார்கள். அவர் எழுதுகிறார்: மண்டி பஹாவுத்தீனில் 11 வருடங்கள் மாவட்ட முரப்பி ஆக பணிபுரியும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது. சர்க்கரை ஆலையின் ஒரு பிரிவில் இவர் Head of the Department ஆக இருந்தார். அந்த ஊரின் ஸயீம் அன்ஸாருல்லாஹ் ஆக இருந்தார். ரிஷ்தா நாத்தா செயலராகவும் இருந்தார். பைத்துஸ் ஸிக்ர் விருந்தினர் இல்லத்தின் முரப்பி இல்லத்தின் கமிட்டி தலைவராகவும் இருந்தார். ஜமாஅத்தாக ஐவேளைத் தொழுகைகளை தொழுது வந்தார். தஹஜ்ஜுத் தொழுபவர் ஆவார். முரப்பி இல்லம் பள்ளிவாசலுக்கு அருகில் தான் இருக்கிறது.

முரப்பி சாஹிப் கூறுகிறார்கள்: பலமுறை தனிமையாக தொழ வேண்டும் என்ற சிந்தனை எனக்கு வரும் போது நான் முயற்சி செய்து தொழுவதற்காக பள்ளிவாசலுக்குச் செல்வேன். ஃபஜ்ருக்கு முன்னால் சீக்கிரமாக சென்று நஃபில் தொழ வேண்டும் என்று முயற்சி செய்யும் போது எப்போது சென்றாலும் நுஸ்ரத் மஹ்மூது சாஹிப் அங்கு தொழுது கொண்டிருப்பதை நான் பார்த்திருக்கிறேன். அவர்கள் அல்லாஹ்விடம் அழுதழுது துஆ செய்து கொண்டிருப்பார்கள். தமது வருமானத்திற்கு ஏற்ப சரியான பட்ஜெட் கொடுப்பார்கள். உரிய நேரத்திற்குள் சந்தாவை செலுத்தி வந்தார்கள். ஸதக்கா மற்றும் நற்காரியங்களில் அதிகமாக பங்கெடுப்பார்கள். ஏழைகள், தேவை உடையவர்கள், ஊனமுற்றவர்கள் ஆகியோரை கவனித்து வந்தார்கள். அவ்வாறே தூய்மையை விரும்புபவர் ஆவார். அவர் தமது சுத்தத்தை பேணியதுடன் விருந்தினர் இல்லத்தையும் சுத்தமாக வைத்திருப்பதன் பக்கம் கவனத்துடன் இருந்தார்கள்.

முரப்பி சாஹிப் கூறுகிறார்கள்: நடை பயிற்சிக்காக என்னுடன் வருவார்கள். அப்போது அவர் ஒருபோதும் உலகப் பேச்சுக்களைப் பேசியதில்லை. எப்போதும் தஃவத்தே இலல்லாஹ் மற்றும் ஜமாஅத் தொடர்பாகவே பேசி வந்தார். தமது வண்டியை ஜமாஅத் பணிகளுக்காகவும் ஏழைப் பெண்களின் திருமணத்திற்காகவும் பெட்ரோல் போட்டுக் கொடுப்பார்கள். வரும்போதும், போகும் போதும் ஏழைகளுக்கு லிஃப்ட் தேவைப்பட்டால் அவர்களுக்கு லிஃப்ட் கொடுப்பார்கள். அவர் கூறுகிறார்: நான் ஒருபோதும் அவர் கோபப்பட்டுப் பார்த்ததேயில்லை.

அஹ்மதி அல்லாத ஒரு பணியாளர் இவரிடம் இருந்தார். அவர் கூறினார்: நான் நுஸ்ரத் சாஹிபுடன் 25 வருடங்களாக பணியாற்றியுள்ளேன். வாழ்க்கையில் அவர் ஒருமுறை கூட என்னை ஏசியதே இல்லை. கோபப்பட்டதில்லை. தம்மிடம் வேலை பார்த்தவர்களுக்கு ஒவ்வொரு பெருநாளிலும் புதிய துணிகள் வாங்கிக் கொடுப்பார்கள். அன்பளிப்புகளை வழங்கி வந்தார்கள். கிலாஃபத்துடன் ஆழமான நேசம் இருந்தது. குத்பாவை எப்போதும் LIVE ஆக கேட்டு வருவார்கள். நடைபயிற்சியில் செல்லும்போது இன்று இவ்வாறு கூறப்பட்டது. இன்னின்ன விசயங்களின் பால் கவனமூட்டப்பட்டது என்று பேசி வருவார்கள். எப்போதும் மார்க்கத்திற்கு உலகத்தை விட அதிக முக்கியத்துவம் வழங்க வேண்டும் என்று வலியுறுத்தி வந்தார்கள்.

அவ்வாறே முரப்பி சாஹிப் கூறுகிறார்: ஏதாவதொரு இடத்திற்கு செல்ல வேண்டியது வந்தால் அவர் முதலில் முரப்பி சாஹிப் மற்றும் அவரது குடும்பத்தை முதலில் காரில் அழைத்துச் சென்று இறக்கி விட்ட பிறகு மீண்டும் வந்து தமது குடும்பத்தை அழைத்துச் செல்வார்கள். விருந்துகளில் ஏழைகளை கண்டிப்பாக அழைப்பார்கள். அல்லாஹ் இவரது தர்ஜாக்களை உயர்த்திக் கொண்டே செல்வானாக! இவரது பிள்ளைகள் இவரது நன்மைகளை தொடர்ந்து நிலைத்திருக்கும்படி செய்ய நல்வாய்ப்பு நல்குவானாக! பாகிஸ்தானில் அஹ்மதிய்யத்தின் எதிரிகளின் ஒவ்வொரு தீமையிலிருந்தும் பாதுகாப்பாக வைப்பானாக! தனது சிறப்பான அருளை வழங்கியவாறு நமக்கு வெற்றி மற்றும் உதவியின் காட்சிகளை விரைவாக காட்டுவானாக! நான் ஏற்கனவே கூறியது போன்று இந்நாட்களில் துஆக்களின் பால் மிக அதிகமாக கவனம் செலுத்துங்கள்.

★ ★ ★ ★ ★

**JUMUA KHUTBA**

**HADHRAT KHALIFATUL MASIH V**

AT BAIT-UL-FUTUH MOSQUE, LONDON.

**ON 30.11.2012**

Translated by : Maulavi S. ABDUL QADIR

Published by : MAJLIS KHUDDAMUL AHMADIYYA
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
TELEFAX : 0462 - 2352456